# INTERNATIONAL RESEARCH CONFERENCE OF THE LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA 2025

## Community Empowerment through Libraries in the Digital Era

கிழக்குப் பல்கலைக்கழக நூலகமானது **நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச ஆய்வு மாநாடு** ஒன்றை எதிர்வரும் 29 **ஏப்ரல் 2025** அன்று ஏற்பாடு செய்துள்ளது. இது தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நூலகம் மற்றும் தகவல் நிபுணர்களின் ஆய்வுகள், அறிவு மற்றும் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாக அமையும். குறிப்பாக பொது நூலகர்கள் தமது ஆய்வு திறன்களை வளர்க்க இது ஒரு களமாக அமையும்.

இவ் ஆய்வு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு உங்களை அழைப்பதுடன் நூலகம் மற்றும் நூலக விஞ்ஞானம் தொடர்பான பின்வரும் கருப்பொருள்களிலோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான கருப்பொருள்களிலோ ஆய்வு கட்டுரைகள் அல்லது ஆய்வுச் சுருக்கங்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

### கருப்பொருள்கள்:

- சமூக ஈடுபாட்டிற்கான நூலகங்கள்
- கலாசார மற்றும் சமூக மையங்களாக நூலகங்கள்
- நூலகங்களில் AI மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம்
- கல்வி மற்றும் வாழ்நாட் கற்றல்
- சுற்றுலாத் தளமாக நூலகங்கள்
- நூலகம் மற்றும் நூலக விஞ்ஞான கல்வி மற்றும் ஆராய்ச்சியில் புதிய போக்குகள்
- நூலகம் மற்றும் நூலக விஞ்ஞானத்தின் பன்முகத்தன்மை
- ஆவணமாக்கல் மற்றும் ஆவண பாதுகாப்பு முகாமை
- நூலகத்தில் இடர்முகாமைத்துவம்

### முக்கிய தேதிகள்:

- ஆய்வுச் சுருக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தேதி - 10.03.2025
- ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு - 25 .03.2025
- இறுதி சமர்ப்பிப்பு –04 .04.2025
- பங்கேற்பிற்கான பதிவு ஆரம்பிக்கப்படும் தேதி- 05.04.2025
- ஆய்வு மாநாடு நடைபெறும் நாள் - 29. 04.2025

## ஆக்கங்கள் சமர்ப்பிக்கும் முறை:

*ஆய்வாளர்கள் தங்கள் ஆக்கங்களை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிகளில்* **ircl2025@esn.ac.lk** *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். ஆக்கங்கள் உருவாக்கப்படும் பொழுது பின்வரும் வழிகாட்டல்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்*

## ஆய்வாளர்களுக்கான வழிகாட்டுதல்கள்

*சுருக்கங்களைத் தயாரிக்கும்போது ஆய்வாளர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. சுருக்கங்கள் ஆங்கிலம்/ தமிழ் மொழிகளில் MS Word ஐப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும். சுருக்கங்கள் பின்வரும் பகுதி களைக் கொண்டிருக்க வேண்டும்:*

| **பகுதி** | **வழிகாட்டுதல்கள்** |
|---|---|
| தலைப்பு | ஆய்வறிக்கையின் தலைப்பு ஆராய்ச்சியின் மையக் கருத்தை வெளிப்படையாகக் குறிப்பதாக இருக்க வேண்டும். தலைப்பு 20 சொற்களுக்குக் குறைவாக இருக்க வேண்டும். |
| ஆசிரியரின் அல்லது ஆசிரியர்களின் பெயர்கள் | ஆசிரியரின் பெயர் பதவி, மின்னஞ்சல் என்பவற்றைக் குறிப்பிடவும். பல ஆசிரியர்கள் இருப்பின் தொடர்பு கொள்க்கூடிய ஆசிரியரின் பெயரை அடிக்கோடிட்டுக் காட்டவும். |
| உள்ளடக்கம் | அறிமுகம், நோக்கம், ஆய்வு முறை, ஆய்வில் கண்டறியப்பட்டவை, முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை சுருக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும். மேலும் அட்டவணைகள் சேர்க்கப்படக்கூடாது. |
| திறவு சொற்கள் *Keywords* | உரையின் முடிவில் அதிகபட்சம் ஐந்து திறவுச் சொற்கள் வழங்கவேண்டும் |
| பக்க வடிவமைப்பு | காகித அளவு: A4 (ஒரு அங்குல விளிம்பு மேல், கீழ், இடது மற்றும் வலது) எழுத்துரு வகை: *Times New Roman* (ஆங்கிலம்)/ *Kalaham* (தமிழ்) |

| | |
|---|---|
| | எழுத்துரு அளவு: 12<br>வரி இடைவெளி: 1pt<br>சொற்களின் எண்ணிக்கை: 250-300 வார்த்தைகள் |

### சுருக்கம் மற்றும் வெளியீடு தேர்வு

வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை முறையாக பூர்த்தி செய்யும் சுருக்கங்கள் மதிப்பாய்வாளர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும். இச் சுருக்கங்களை மாநாட்டில் முன்வைப்பதற்கு ஆய்வாளர்கள் மாநாட்டுக்கு அழைக்கப்படுவார்கள், மேலும் அவர்களின் சுருக்கம் மாநாட்டு நூலில் வெளியிடப்படும். **முழு பதிவு கட்டணத்தையும் காலக்கெடுவிற்குள் செலுத்தாத ஆய்வாளர்களின் ஆய்வுச் சுருக்கங்கள் வெளியிடப்பட மாட்டாது.**

### பதிவு கட்டணங்கள்

பதிவு கட்டணம் பின்வருமாறு அறவிடப்படும். அனைத்து மாநாட்டு அமர்வுகளுக்கான சேர்க்கை, மதிய உணவுகள், சிற்றுண்டி (காலை மற்றும் பிற்பகல்), மற்றும் பங்கேற்பு சான்றிதழ் ஆகியவை இக் கட்டணத்தினுள் அடங்கும்.

| வகை | பதிவு கட்டணம் |
|---|---|
| **உள்ளூர் ஆய்வாளர்கள்** | |
| ○ விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக நூலகர்கள் | ரூ.5,000 |
| ○ பொது நூலகர்கள் | ரூ.2,000 |
| ○ மாணவர்கள் | ரூ.1,000 |
| **உள்ளூர் பங்கேற்பாளர்கள்** | |
| ○ பங்கேற்பாளர்கள் | ரூ.1,500 |
| ○ மாணவர்கள் | ரூ.1,000 |
| **வெளிநாட்டு பங்கேற்பாளர்கள் & ஆய்வாளர்கள்** | அமெரிக்க டாலர் 70 |

**கட்டணங்களை செலுத்துவதற்கு தேவையான விவரங்களை வலைத்தளத்தில் (www.lib.esn.ac.lk)** பெற்றுக்கொள்ளலாம்.

## தொடர்புகள்

**மாநாட்டுத் தலைவர்:**
திரு. எம். என் ரவிக்குமார்
சிரேஸ்ட உதவி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
தொலைபேசி: +94 77 316 9572

**மாநாட்டு இணைத் தலைவர்:**
திரு. எஸ். சாந்தரூபன்
பிரதி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
மின்னஞ்சல்: ircl2025@esn.ac.lk

**மாநாட்டு செயலாளர்:**
திருமதி. ஜி. நவிரதன்
சிரேஸ்ட உதவி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
தொலைபேசி: +94 76 666 0989